புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# பாரதியின் கவிதைகளில் காலன்

முனைவர் ப. ரேவதி
இணைஆய்வறிஞர்
சுவாமி விவேகானந்தர் உயராய்வு மற்றும் கல்வி மையம்
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 046

ஆய்வுச் சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த படைப்பாளர்களுள் ஒருவரான மகாகவி பாரதியார் பன்முகத் திறன் படைத்தவர். மரபார்ந்த கவிதை நடையினின்று மாறுபட்டுப் புதுக்கவிதை எனும் புத்திலக்கிய வகைமைக்குத் தடமிட்ட முன்னோடி. நாட்டையும் பாட்டையும் உயிரெனக் கொண்ட பாரதியின் கவிதைகளின் பாடுபொருள் பன்முகத் தன்மையது. தம் சமகால அனுபவங்களை படைப்புகளில் பதிவு செய்யும் பாரதியார் தம் காலத்திற்கு முந்தைய வேத இதிகாச புராணத் தொன்மங்களையும் எடுத்தாளும் தன்மை கொண்டவராகத் திகழ்ந்தார். தொன்மக் கதைகளில் இறப்பின் தெய்வமாகச் சுட்டப்பெறும் காலன் குறித்தப் பதிவுகள் பெரும்பாலும் மரணத்தின் அதிபதி, இறப்பு பற்றிய பயம், தர்மம், அதர்மம் கணக்கீடு என அச்சம் தரும் குறியீடாகவே நீள்கிறது. இப்பதிவுகளில் இருந்து பாரதி முற்றிலும் மாறுபட்டு காலனை இயல்பானத் தன்மையுடன் அணுகுகிறார். உயர்வுநவிற்சியாகவோ, அச்சத்தின் குறியீடாகவோ காலனைக் காட்சிப்படுத்தாமல் பொதுத்தன்மையுடன் காலனைத் தம் கவிதைகளில் எடுத்தாள்கிறார். காலன் குறித்த பாரதியின் பார்வையை கவிதைகளின் வழி நின்று நிறுவுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

## முன்னுரை

மகாகவி பாரதி இருபதாம் நூற்றாண்டின் இணையற்றக் கவிஞர். எட்டயபுரம் தொடங்கி உலகமகாகவி வரை நீள்கின்ற பாரதியின் வரலாறு புத்திலக்கியம் படைக்க விரும்பும் இளம்படைப்பாளர்களுக்குப் புனிதநூல். கவிஞர், கட்டுரையாளர், பொழிவாளர், இதழாளர், மொழிபெயர்ப்பாளர், தத்துவஞானி, இசையறிஞர், கதையாசிரியர், மனிதநேயர் எனப் பன்முகம் கொண்ட மகாகவி பாரதியின் படைப்பிலக்கியங்களுள் அவரது கவிதைகளுக்கு உயிர்ப்பிக்கும் சக்தி உண்டு. விடுதலைப் போராட்டக் காலத்தில் அடிமையுணர்வுடன் முடங்கிக் கிடந்த மக்களின் உணர்வுகளை எழுப்பும் உந்துசக்தியாக பாரதியின் கவிதைகள் அமைகின்றன. பக்தி, வேதாந்தம், பாரத நாடு, தமிழ்நாடு, சுதந்திரம், தேசிய இயக்கம், தேசியத் தலைவர்கள், அயல்நாடுகள், தன் வரலாறு, முக்காவியங்கள், வசன கவிதை மற்றும் பன்முக நோக்கில் பல கவிதைகளைப் பாடிய பாரதியின் கற்பனையில் உலகில் உள்ளனவும் இல்லனவும் அடங்கும். காக்கையைக், குருவியைக், கடலை, மலையைப் பாடிக்களித்த பாரதி தன் வாழ்வியலில் கண்டுணர்ந்து சிந்தித்தவற்றையெல்லாம் படைப்புகளில் பதிவு செய்திடும் தன்மை கொண்டவராக விளங்கினார். அங்ஙனம் பாரதியின் கவிதைகளில் புலனாகும் காலன் குறித்தப் பதிவுகளை ஆய்ந்தறிவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறிமுறை

பாரதியின் கவிதைகளில் காணப்படும் காலன் குறித்தத் தரவுகளை இனங்காணப் படைப்பு வழி அணுகுமுறையும் காலன் குறித்தப் பதிவுகளை வகைப்படுத்துமிடத்து பகுப்பாய்வு அணுகுமுறையும், இவ்வாய்வில் கையாளப்பட்டுள்ளது.

ஆய்வுக் கருதுகோள்

பாரதியின் கவிதைகளில் காலன் அச்சம் தரும் குறியீடாக அல்லாமல் இயல்புத்தன்மையுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளார் என்பது இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

மகாகவி பாரதியாரின் பாடல்கள் / கவிதைகள் இவ்வாய்வின் எல்லையாக அமைகின்றன.

காலன்

வேதங்களில் காலன், யமன், எமன் எனச் சுட்டப்படுகிறார். காலன் இறப்பின் தெய்வமாக தொல்புராணங்கள் மற்றும் இதிகாசங்களில் குறிக்கப்படுகிறார். இந்து புராணக் கதைகள் காலனைப் பூமியில் பிறந்த முதல் மனிதனாகக் குறிக்கின்றது. தான் செய்த அளவற்ற தர்மத்தின் காரணமாக உயிர்களை நிர்வகிக்கும் பொறுப்புக்கு அதிபதியாக காலன் நியமிக்கப்பட்டதாக தொல்வழக்காறுகள் உரைக்கின்றன. இந்து புராணங்களில் காலன் தர்மத்தின் தலைவனாகக் கருதப்படுகிறான். எமதர்ம ராஜா என அழைக்கும் வழக்கம் இன்றளவும் தொடர்கிறது.

காலன் சூரியன் மற்றும் உஷா தேவியின் மகனாகக் கருதப்படுகிறார். சனிக் கிரகத்தின் தலைவனும் காலனும் உடன்பிறந்தவர்களாக கருதப்படுகின்றனர். எருமையை வாகனமாகக் கொண்டு இடக்கரத்தில் பாசக்கயிற்றை ஏந்தி தெற்கு திசையின் காவல் தெய்வமாக நிற்கும் எமன் உயிர்களின் இறப்புக்குப் பிறகு அவற்றைச் சொர்க்கத்திற்கு அல்லது நரகத்திற்கு அனுப்பும் பணியை மேற்கொள்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. காலனின் நேரடி உதவியாளராக சித்திர குப்தர் அமைகின்றார். உயிர்களின் நடத்தையை மதிப்பிட்டு அறம் மற்றும் பாவச் செயல்களைக் கணக்கிட்டு அவர்களுக்கான மேலுலக வாழ்க்கையைக் காலன் கணக்கிடுவதாக வேதங்கள் குறிக்கின்றன. பழம்பெரும் வேதமான ரிக் வேதத்தின் 10, 14, 135 ஆகிய மந்திரங்கள் காலனைக் குறிப்பதாக அமைகின்றன. காலனை எதிர்த்து மரணத்தை வென்றிடும் மார்கண்டேயன், சத்யவான் சாவித்ரி கதைகள் வரலாற்றில் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இன்றளவும் காலன் நீதி தவறாத தர்மத்தின் மாற்றுவடிவமாகக் கருதப்படுகிறார். காலன் குறித்தப் பதிவுகள் சங்ககாலம் தொடங்கி சமகாலம் வரை உள்ள இலக்கியங்களில் காணப்படுகின்றது. குறிப்பாகக் கருட புராணம், மார்க்கண்டேய புராணம் காலனை முதன்மைப்படுத்தி எழுதப்பட்ட இலக்கியங்களாகும். சமயங்களுக்கு அப்பாற்பட்டு மரபார்ந்த இலக்கியங்களில் நெடுங்காலமாக பதிவு செய்யப்படும் காலன் எனும் கண்ணுக்குப் புலப்படா ஆளுமை குறித்து மகாகவி பாரதியாரின் கவிதைகளிலும் பதிவுகள் காணப்படுகின்றன.

பாரதியின் கவிதைகளில் காலன்

காலன் குறித்தப் பதிவுகள் (காலன் 6, காலா 1, கூற்று 5) ஆகிய 12 இடங்களில் காணப்படுகின்றது. காலன், காலா, கூற்று ஆகிய மூன்று சொல்லாடல்கள் காலனைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

காலனுக்கு அச்சமூட்டுதல்

ஜயப்பேரிகை கொட்டித் தன் வேதாந்தக் கருத்துகளை முன்னிறுத்தி ஆடிப் பாட முனைந்த பாரதி,

“இரவியி னொளியிடைக் குளித்தோம்-ஒளி
இன்னமு தினையுண்டு களித்தோம்
கரவினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடுநடுங்க விழித்தோம்”[1]

எனப் பாடுகின்றார். உயிர்களை அழித்து காலன் என்றவுடன் அச்சத்தை ஏற்படுத்தும் காலனுக்கே நடுக்கம் ஏற்படுத்தும் விதமாக ஜயப்பேரிகைக் கொட்டிப் பாடிடுக எனும் கருத்தை இப்பாடல் முன்னெடுக்கின்றது. மரணத்தைக் குறித்த அச்சத்தை விடுத்து மரணத்துக்கே அச்சம் வரும் அளவு துணிவுடன் செயல்பாடுகள் அமைந்திட இப்பாடல் உந்துசக்தியாக அமைகின்றது.

காலன் - அச்சத்தை விடுதல்

பாரதி தெய்வச் சக்திகளை தம்முள்ளே நிலைபெறச் செய்திட சொல் வேண்டிப் பாடும் பாடலில், காலன் குறித்தப் பயம் அழிந்துபோகும் எனத் தன்னம்பிக்கையுடன் பாடிநிற்கிறார்.

“தெய்வக் கனல்விளைந்து காக்குமே - நம்மைச்

சேரும் இருளழியத் தாக்குமே.
கைவைத் ததுபசும்பொன் ஆகுமே - பின்பு
காலன் பயமொழிந்து போகுமே.''[2]

எனும் பாடலில் மரணத்தை நினைத்தவுடன் மனதில் எழும் அச்சவுணர்வினின்று, வெளிவருவதற்கான உத்தியைக் காட்டுகிறார்.

காலன் மறைதல்

பாரத மாதாவிற்கு நவரத்ன மாலை பாடியமைந்த பாரதி சக்தியைக் கண்டவுடன் கைகூப்பி வணங்கி மறைந்தொழியும் காலனை,

''காலன் எதிர்ப்படிற் கைகூப்பிக்
கும்பிட்டுக் கம்பனமுற்
றோலமிட் டோடி மறைந்தொழி வான்''[3]

எனுமாறு பதிவு செய்கிறார். தெய்வச் சக்தியின் முன் காலன் பணிந்து செல்வதை இக்கவிதை எடுத்துரைக்கின்றது.

காலனின் பண்பு

புதிய சாத்திரம் வேண்டி தமிழ்த்தாய்க்கு ஆனந்தகளிப்பு சந்தத்தில் கவிபாட முனைந்த பாரதி

''நேத்திரங் கெட்டவன் காலன் - தன்முன்
நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான்.
நன்றென்றுந் தீதென்றும் பாரான் - முன்
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல் - வையச்
சேர்க்கை யனைத்தையும் கொன்று நடப்பான்''[4]

எனக் காலனின் பண்புகளைத் தமிழ்த்தாயின் மொழிவழி எடுத்துரைக்கின்றார்.

காலனின் மாற்றுவடிவம்

ஜார் சக்கரவர்த்தியின் வீழ்ச்சிக்குப் பிறகு புதிய ரஷ்யா முளைத்தது பற்றிப் பாட முனைந்த பாரதி, ஜார் மன்னனின் கொடுங்கோன்மையைக் காலனின் கொடுங்கோன்மையோடு ஒப்பிடுகிறார். மேலும், ஜார் மன்னனைக் காலனின் மாற்றுவடிவமாக உவமிக்கிறார்.

''மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற் கடைக்கண் வைத்தாள் அங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி
கொடுங்காலன் அலறி வீழ்ந்தான் ''[5] எனக் குறிப்பிடுகிறார்.

காலனை வாழ்த்துதல்

பாரதி தத்துவங்களில் கைதேர்ந்தவன். தன்னைச் சித்தனாகக் கருதிப் பல தத்துவப் பாடல்களைப் பாடித் திரிந்தவன். தன்னுள் தெய்வத்தைத் தேடிய ஞானி. அத்தகு பாரதி காலனைச் சிவனின் மறுவடிவமாகக் கண்டு வாழ்த்தி,

''எங்குஞ் சிவனைக் காணடா! ஈனப் பயத்தைத் துரத்தடா!
கங்கைச் சடையா, காலன் கூற்றே காமன் பகையே வாழ்கநீ!''[6] எனப் பாடுகின்றார்.

காலனுக்கு உரைத்தல்

காலனின் வரவை எண்ணி, அஞ்சியும் கெஞ்சியும் பாடும் படைப்பாளர்களுக்கு மத்தியில் பாரதி வேறுபட்டவராகத் திகழ்கிறார். பாகவத புராணம் கூறும் கஜேந்திர யானை மீட்பு வரலாற்றையும், மார்க்கண்டேயன் வரலாற்றையும் காலனுக்கு நினைவுப்படுத்தி கெட்ட மூடனே என அதட்டி அட! என விளித்து,

''காலாஉனை நான் சிறு புல்லென மதிக்கிறேன். என்றன்
காலருகே வாடா! சற்றேஉனை மிதிக்கிறேன்... அட (காலா)

*வேலாயுத விருதினை மனதிற் பதிக்கிறேன் - நல்ல*
*வேதாந்த முரைத்த ஞானியர் தலையெண்ணித் துதிக்கிறேன்... ஆதி*
*மூலாவென்று கதறிய யானையைக் காக்கவே - நின்றன்*
*முதலைக்கு நேர்ந்ததை மறந்தாயோ? கெட்ட மூடனே... அட (காலா)*

*ஆகால முண்டவ னடிசர ணென்ற மார்க்கண்டன் - தன*
*தாவி கவரப்போய் நீபட்ட பாட்டினை யறிகுவேன்... இங்கு*
*நாலாயிரம் காதம் விட்டகல் உன்னை விதிக்கிறேன் - ஹரி*
*நாராயண னாகநின் முன்னே உதிக்கிறேன்... அட (காலா) (காலா)”*[7]

*எனப் பாடுகிறார்.*

*கூற்றுவன்*

*காலனைக் குறிக்கும் கூற்றுவன் எனும் சொல்லாடலை 5 இடங்களில் பாரதி கையாள்கிறார். தேடிச் சோறு நிதம் தின்று, வீழ்ந்திடும் வேடிக்கை மனிதர்களைப் பற்றிப் பேச முனைந்த பாரதி,*

*“தேடிச் சோறுநிதந் தின்று - பல*
*சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்*
*வாடித் துன்பமிக உழன்று - பிறர்*
*வாடப் பலசெயல்கள் செய்து - நரை*
*கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்*
*கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல*
*வேடிக்கை மனிதரைப் போலே - நான்*
*வீழ்வே னென்றுநினைத் தாயோ?”*[8] *எனப் பாடுகிறார். மேலும், கூற்றினுக்கு உயிர் கோடி கொடுத்திடவும், கூற்றான அரக்கர் உயிர் குறித்தும் பாடுகிறார். புயல் காற்று குறித்துப் பாட முனைந்த பாரதி காற்றென வந்தது கூற்றமிங்கே என அழிக்க முற்படும் காற்றைக் காலனுடன் ஒப்பிடுகிறார்.*

*முடிவுரை*

*மகாகவி பாரதி காலன் எனும் புராண ஆளுமை குறித்தப் பதிவுகளைத் தம் கவிதைகளில் 12 இடங்களில் கையாள்கிறார். காலன், காலா, கூற்று ஆகிய மூன்று சொல்லாடல்களைக் கையாளும் பாரதி கஜேந்திரன் மற்றும் மார்க்கண்டேயன் ஆகியோர் குறித்த இரு புராணக் கதையைச் சுட்டிக் காட்டுகிறார். தம் படைப்புகளில் வேத, புராண, இதிகாசத் தொன்மக் கூறுகளைக் கையாளும் இயல்பு கொண்ட பாரதி காலன் குறித்தும் கையாண்டுள்ளது நோக்கத்தக்கது. காலனை மரணத்திற்குரிய தெய்வமாக, அஞ்சி வணங்கும் மானிடருக்கு மத்தியில் அச்சத்தை வெல்லும் பண்புடன் பாரதி காலனை எதிர்கொண்டது புதிய உத்தியாக உள்ளது. மேலும், காலனை மூடன், அட என சக உறவைப்போல விளிக்கும் பாரதியின் அணுகுமுறை வியப்புக்குரியதாக உள்ளது. பாரதியின் கவிதைகளில் காலன் அச்சம் தரும் குறியீடாக அல்லாமல் இயல்புத்தன்மையுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளார் எனும் கருதுகோள் இவ்வாய்வின் வழி மெய்ப்பிக்கப்பட்டது.*

*மேற்கோள்*

*1. பாரதியார், பாரதியார் கவிதைகள், வானவில் பிரசுரம், சென்னை. 1977, ப. 74*
*2. மேலது, ப. 79*
*3. மேலது, ப. 109*
*4. மேலது, ப. 118*
*5. மேலது, ப. 149*
*6. மேலது, ப. 325*
*7. மேலது, ப. 272*
*8. மேலது, ப. 45*

********* ********* ********** ********* ********* ********** ********** **********